DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 1/2018**

Deposition of witness for Prosecution அ.சா.1

Name : ராஜலெட்சுமி
Father/ Husband Name : சண்முகராஜா
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 01.08.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது தாழையூரில் குடியிருந்து வருகிறேன். புகார்தாரர் எனது கணவர். அவர் தற்போது சிங்கப்பூரில் உள்ளார். கடந்த 01.06.2016-ம் தேதி என் நாத்தனார் வீட்டு காதுகுத்துக்காக குடும்பத்துடன் அனைவரும் வெளியூர் சென்றிருந்தோம். பின்னர் 03.06.2016-ம் தேதி திரும்ப வந்து வீட்டை பார்த்த போது வீட்டின் பின்புற கதவு உடைக்கப்பட்டு பீரோ கதவு உடைக்கப்பட்டிருந்தது. பீரோவில் இருந்த வெள்ளிப்பொருட்களான குத்துவிளக்கு, காமாட்சி விளக்கு, சந்தனப்பேழா, சங்கு, குங்குமச்சிமிழ் காணாமல் போய் இருந்தது.

2. அவற்றின் மதிப்பு சுமார் ரூ.23,000/-, 24,000/- இருக்கும். எனது கணவர் புகார் கொடுத்தார். காணாமல் போன வெள்ளிப் பொருட்களை நீதிமன்றம் மூலம் திரும்ப பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள வெள்ளிப் பொருட்கள் தான் நான் திரும்ப பெற்றுச் சென்ற திருடு போன என்னுடைய வெள்ளிப் பொருட்கள் ஆகும். **(மேற்படி புகைப்படங்கள்-10 எண்ணிக்கை, பஞ்சநாமா மற்றும் குறுந்தகடுடன் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சம்பவம் எந்த தேதியில், எந்த நேரத்தில் நடந்தது என்று தெரியுமா என்றால் நாங்கள் வீட்டிற்குள் வந்து பார்க்கும்போது உடைந்து கிடந்தது. சம்பவ நடந்த போது நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல, எதிரிகளை தான் காவல்நிலையத்தில் அடையாளம் காட்டினார்கள். நான் கணவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.